பட்டதாரி ஆசிரியர்களை பணியில் சேர்ந்த நாள் முதல் பணி வரன்முறை செய்யாதலால் ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து

[1984 மார்ச் 26]

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"பணிவரன்முறை செய்யப்பட்டுள்ள சுமார் 1,000 பட்டதாரி ஆசிரியர்களுக்கு பணியில் சேர்ந்தநாள் முதல் பணிவரன்முறை செய்யப்படாததால், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து".

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: விவர அறிக்கையின் முதல் பத்தியில் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு அவர்கள் பெற்று வந்த ஊதியத்தைத் தொடர்ந்து பெற ஆணை பிறப்பிக்க வேண்டிய தேவையில்லை என்று பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிவுரை அனுப்பப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், ஒரு சாராருக்கு அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை மற்றும் இதர சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்னொரு சாராருக்கு அவர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்து பணிவரன்முறை சலுகை அளிக்கப்படவில்லை. இது ஒரு முரண்பாடு. பணியில் சேர்ந்த நாளிலிருந்து பணிவரன்முறை சலுகை அளிக்கப்பட்டவர்களுக்குக் கூட அவர்கள் துறைத் தேர்வு தேர்ச்சி பெற வேண்டுமென்ற நிபந்தனை இருந்த காரணத்தால், தகுதிகாண் பருவம் முடித்தல் என்ற அந்தத் தடை இருக்கிற காரணத்தால், அவர்கள் இரண்டாவது ஊதிய உயர்வைப் பெற முடியாத நிலையும், பணப் பயனைப் பெற முடியாத நிலையும், அதன் காரணமாக பல ஆயிரக்கணக்கான ரூபாய் இழப்பை அவர்கள் அனுபவிக்கும் நிலையும் இருக்கிறது. இது ஒரு பிரச்சினை. தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படாத, தற்காலிக ஆசிரியர்கள் அதிகமான ஊதியத்தையும் அதேசமயத்தில் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் குறைவான ஊதியத்தையும் பெற்று வருகிறார்கள். இதுவும் ஒரு முரண்பாடு. இவைகளையும் அரசு கவனித்து எல்லோ

@ 267 268ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[illegible]
பணி வரன்முறை செய்யாதலால் ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து

[திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்] [1984 மார்ச் 26

(முற்பகல் 10-50)

ருக்கும் ஒரேவிதமான கொள்கையாக, எந்தத் தேதியிலிருந்து அவர்கள் பணியில் சேர்ந்தார்களோ அந்தத் தேதியிலிருந்தே அவர்களின் பணியை முறைப்படுத்த தீவிரமான பரிசீலனையை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதை அரசு பரிசீலிக்குமா, நல்ல முடிவு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அரசு இதைப் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய உறுதிமொழிக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டாண்டுகளுக்கு முன்பு தமிழக அரசு பல்லாண்டுக் காலமாக இருந்த பட்டதாரி ஆசிரியர்களுக்கும் அவர்களுக்கு இணையான ஆசிரியர்களுக்கும் தடையாக இருந்த துறைத் தேர்வு நிபந்தனையை நீக்கி நல்லதொரு ஆணையைப் பிறப்பித்தது. ஆனால் இந்த ஆணை ஏப்ரல் 1982-லிருந்துதான் அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. நாங்கள் கேட்டது 1—4—1970-லிருந்து அமுல்படுத்தப்படவேண்டுமென்பதுதான். துறைத் தேர்வு நிபந்தனையை நீக்கி அந்தச் சலுகையை அளித்தால்தான் எல்லோருக்கும் சமமான வாய்ப்பு கிடைக்கும் என்ற அளவில் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தையும் இணைத்து பரிசீலனை செய்வார்களா, பரிசீலித்து நல்லதொரு முடிவை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இதுகுறித்தும் அரசு பரிசீலிக்கும்.

3. 1983-84 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம்.

***திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1983-84-ம் ஆண்டிற்கான இறுதி துணை நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் நான் சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்புத் தந்த தங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே தரப்பட்டிருப்பது துணை மதிப்பீடுதான். ஆனால் இதிலே குறிப்பிட்டிருக்கிற தொகையைப் பார்க்கிறபோது, இது துணை மதிப்பீடு அல்ல என்பதைத்தான் பார்க்க முடிகிறது. இதுதான் எப்போதும் சமர்ப்